என தெரிவித்து கூட்டுறவு சார்பதிவாளர் நிலவள வங்கிகள் தணிக்கையாளர்கள் சான்றிதழ் பெற்று அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்ட பின்னர்தான் வட்டி மானியம் அரசிடமிருந்து பெற இயலும். இவ்வாறு அரசிடமிருந்து மானியம் முழுவதும் பெறப்பட்ட பின்னர்தான், சம்பந்தப்பட்ட கடன் தாரர்களின் கடன் கணக்கிற்கு முழுத்தொகையும் வசூலானதாகக் கருத இயலும். மேலும் பிரதம நிலவள வங்கிகளில் நீண்ட கால கடன் பெற்றுள்ளவர்கள் தங்களது கடன் தொகையை அதிக பட்சமாக 20 ஆண்டுவரையில் திருப்பிச் செலுத்த கால அவகாசம் தரப்படுகிறது. இந்நிலையில் கடன் கணக்கிற்குரிய அசல் வட்டித் தொகைகள் முழுவதும் வசூலான பிறகு, கடன் வழங்கிய ஆரம்ப காலத்திலிருந்து கடன் கணக்கு முடிவு கட்டிய காலம் வரைக்கும் ஆண்டுத் தவணைகள் சரியாக எழுப்பப்பட்டு, தொகைகள் முழுவதும் வசூல் செய்யப்பட்டுள்ளதா என சரி பார்த்து ஒவ்வொரு இனத்திலும் கூட்டுறவு சார்பதிவாளர் (நிலவள வங்கி) அல்லது மாநில நிலவள வங்கியில் நில மதிப்பீட்டாளர் (Land Valuation Officer) ஆகியோரால் சான்றிதழ் கொடுக்கப்பட்ட பின்னரே, ''கடன் பைசல் செய்யப்பட்டது'' குறித்தான சான்றிதழை பிரதம நிலவள வங்கியினால் தர இயலும். மேற்கண்ட வகையில், சரிபார்த்து உரிய அலுவலரிடம் சான்றிதழ் பெறப்படாமல், கடன்தாரர்களுக்கு கடன் பைசல் சான்றிதழ் நிலவள வங்கியினால் கொடுக்கப்பட்டு விடுமேயானால், தொகை ஏதாவது கடன்தாரர்களிடம் கூடுதலாக வசூல் செய்ய வேண்டிய சூழ்நிலை பின்னர் ஏற்படுமேயானால், அத்தொகைகளை கடன்தாரர்களிடம் வசூலிப்பது மிகவும் சிரமமான காரியம் என்பதோடு, அவ்வாறான கடன்தாரர்கள், தாங்கள் தொகை எதுவும் செலுத்தவேண்டியதில்லை என வாதிட்டு கொடுக்கப்பட்ட சான்றிதழ் அடிப்படையில் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலையும் ஏற்படலாம்.

4. மேற்கண்ட சூழ்நிலைகளின் அடிப்படையில்தான் கடன் பைசல் சான்றிதழ் உடனடியாக தரக்கூடாது என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) தோவாளை ஒன்றியம் காட்டுப்புதூரில் தீ விபத்து:

திரு. கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்ட தோவாளை ஒன்றியம் காட்டுப்புதூரில் ஐம்பது வீடுகள் எரிந்து மக்கள் பாதிக்கப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

1987 ஏப்ரல் 23] [டாக்சர் இரா. நெடுஞ்செழியன்]

அறிக்கை.

3–3–1987 அன்று பகல் சுமார் 11–00 மணியளவில் தோவாளை வட்டம், அழகிய பாண்டிபுரம் கிராமம், காட்டுப் புதூரில் எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்பட்டு 31 வீடுகள் சேதமடைந்தன. இரண்டு வயதுள்ள ஸபிதா என்ற பெண் குழந்தை தீயில் கருகி இறந்து விட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு விதிப்படி, முழுமையாக சேதமடைந்த 17 குடிசைகளுக்கு தலா ரூ. 300-ம், பகுதியாக சேதமடைந்த 14 குடிசைகளுக்கு தலா ரூ. 150-ம் ஆக மொத்தம் ரூ. 7,200 வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 புடவை, 1 வேட்டி, 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அக் குடும்பங்களுக்கு தலா 2 கிலோ அரிசியும், அவர்கள் வீடுகளைத் திரும்பக் கட்டிக் கொள்ள ஒரு லாரி நிறைய தென்னை ஓலை ஆகியவற்றை பொதுமக்கள் முன்வந்து உதவி செய்துள்ளனர். வீடு கட்டுவதற்கு கடனுதவி வேண்டி வந்த 31 விண்ணப்பங்களும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

2. இத் தீவிபத்தில் மரணமடைந்த ஸபிதா என்ற குழந்தையின் தந்தை திரு. மசனமுத்து என்பவருக்கு அரசு ஆணையின்படி உள்ள ரூபாய் 2,000, 27–3–1987 அன்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. கோ. பெருமாள் பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31 வீடுகள் எரிந்து சாம்பலாகி விட்டன. அவர்களுடைய விவசாயக் கருவிகள் எல்லாம் கூட எரிந்து சாம்பலாகி விட்டன. இந்த நிலையில் அவர்கள் பிழைப்பதற்கு வழி இல்லாமல் பள்ளிக்கூட வராண்டாக்களில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக கடன் பெற மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியிருப்பதாக அறிக்கை சொல்கிறது. அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு குறைந்த பட்ச கடன் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறபடி, 31 வீடுகள் சேதம் அடைந்தன. அதிலே முழுவதும் சேதம் அடைந்த 17 குடிசைகளுக்கு ரூ. 300 தரப்பட்டு, 5 கிலோ அரிசியும் தரப்பட்டு, வேட்டி, புடவை ஆகியவற்றோடு ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 11–10)

அதுமட்டுமல்லாமல், ஒரு குழந்தை இறந்து பட்டதன் காரணமாக அதன் பெற்றோர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று 31 குடும்பங்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 23

களின் வீடுகளைக் கட்டுவதற்கும், அவர்கள் வாழ்வு நிலை பெறுவதற்கும் பயன்படுகிற வகையில் அவர்கள் கொடுத்த விண்ணப்பங்களை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டுமென்று சிபாரிசு செய்து இருக்கிறார்கள். அதற்கான முயற்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: தலைவர் அவர்களே, தோவாளை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டால், அந்தப் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லாததால், மாவட்டத் தலைநகரான நாகர்கோவிலிலிருந்துதான் தீயணைப்பு வண்டிகள் வர வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த சம்பவம் நடந்த தினத்தன்றுகூட மாவட்ட தலைநகரிலிருந்து சென்ற தீயணைப்பு வண்டிகள் சரியாக வேலை செய்யவில்லையென்று அந்தப் பகுதி மக்கள் கூறினார்கள். தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் தலைநகரான பூதப்பாண்டியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் முன்பே ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறேன். அதனை இந்த நேரத்தில் ஏற்று இந்த ஆண்டு ஒரு தீயணைப்பு நிலையம் பூதப்பாண்டியில் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்பிற்கும், மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கோரிக்கைக்கும் தொடர்பில்லை என்றாலும், காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் தீயணைப்பு நிலையங்கள் எவ்வளவு இருக்கின்றன, எந்தெந்தப் பகுதியில் இருக்கின்றன, அவை எப்படி செயல்படுகின்றன, இன்னும் எவ்வளவு தேவைப்படுகின்றன என்பதையும், எந்த அளவிற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதையும், அது சம்பந்தப்பட்ட அந்த விவரக் குறிப்புகளையும் தெரிவிக்கலாம்.

(உ) ஆம்பூர் சவுத் ஈஸ்ட் டேனரி மூடப்பட்டிருத்தல் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ரெங்கசாமி அவர்களின் சார்பாக திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ‘‘1986 அக்டோபரிலிருந்து ஆம்பூர் சவுத் ஈஸ்ட் டேனரி தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: